16th March 1964]

நிபுணர்கள் கட்டடக் கலை நிபுணர்கள், அதாவது பிராசீன முறைப்படி ஸ்தபதிகளின் விளக்கமும், அங்கீகாரமும், முழு உதவியும் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வேண்டிய வசதிகளையும் வற்புறுத்தலையும் அரசாங்கம் செய்து வந்திருக்கிறதா ? அப்படிச் செய்து வராவிட்டால், இனிமேல் அப்படிச் செய்ய முயலுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் உறுப்பினர் கூறுகிறபடி தான் அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது. மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவிலிலும் அவ்வாறுதான் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

புலவர் கா. கோவிந்தன் : இப்படிப்பட்ட பழம் பொருள்களைச் செப்பனிடுகிற நேரத்தில், இத்தாலி, எகிப்து போன்ற நாடுகளில் பழைய மெருகு கெடாது, உருக்கெடாமல், புதிய விஞ்ஞான முறைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த முறைகளை அறிந்து செய்ய வேண்டும் என்று பணிக்கர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த முறைகளை அரசாங்கம் அறிந்து நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிற விஷயம். ஆனால், நிபுணர்களின் கருத்தில் வேற்றுமைகள் இருக்கின்றன. ஒரு நிபுணர் நன்றாக இல்லை என்று சொன்னால் மற்றொரு நிபுணர் நன்றாக இருக்கிறது என்று சொல்லுகிறார். கூடிய வரையில் நம்முடைய நாட்டு நிபுணர்கள், அயல்நாட்டு நிபுணர்கள் தொன்மையை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்று சொல்லுகிற அபிப்பிராயங்கள், சிற்பிகள், ஸ்தபதிகள் ஆகியவர்களுடைய அபிப்பிராயங்கள் சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டுதான் இந்தத் திருப்பணி வேலைகள் உருவாக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

*273 கேள்வி—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் திருப்பணிக்குச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அதற்கெனத் தமிழக அரசாங்கம் அளித்த நிதி எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Rs. 22,34,706–95 nP. up to October 1963.

(இ) Nil.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இதில் பொது மக்கள் கொடுத்து உதவிய தொகை எவ்வளவு ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 'டொனேஷன்' என்ற காலத்தில் ரூ. 6,65,633·23 வந்திருக்கிறது. உண்டியல், அர்ச்சனை டிக்கட் விற்பனை செய்தது ஆகிய வகைகளிலே வந்திருப்பது ரூ. 4,31,219·38.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : தமிழ் நாட்டிலுள்ள மற்ற கோவில்கள் மூலமாக 'டைவர்ஷன் ஆப் பண்ட்ஸ்' மூலம் ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவிலுக்கு அளிக்கப்பட்ட பணம் எவ்வளவு ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது ரூ. 11,98,502.

* 274 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to constitute an All-India Committee for the renovation of the temples; and

(*b*) if so, the names of the members and the functions of the committee?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) This Government is not aware of any such proposal.

(*b*) Does not arise.